3. அறிவிப்புகள்

(அ) பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை/ ஆட்சிக் குழு/கல்விக் குழு மற்றும் மேலாண்மைக் குழுமம் ஆகியவற்றுக்கு உறுப்பினர்கள் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பின்வரும் 11 பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை / ஆட்சிக் குழு/கல்விக் குழு மற்றும் மேலாண்மைக் குழுமம் ஆகியவற்றில் 17–8–2014 முதல் பணியாற்ற அப்பல்கலைக்கழகங்களுக்கு நேர் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள எண்ணிக்கையிலான சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்குமாறு சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன.*

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்	*1*
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்	*1*
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்	*1*
அழகப்பா பல்கலைக்கழகம்	*1*
பெரியார் பல்கலைக்கழகம்	*2*
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்	*2*
தமிழ்ப் பல்கலைக்கழகம்	*2*
பாரதிதாசன் பல்கலைக்கழகம்	*2*
பாரதியார் பல்கலைக்கழகம்	*2*
தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம்	*2*
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்	*2*

மேற்குறிப்பிட்டுள்ள பல்கலைக்கழகங்களின் அமைப்புகளுக்குத் தேர்வு செய்யப்படும் உறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்றாண்டுகள் ஆகும்.

2014 ஆகஸ்ட் 11] [பேரவைத் தலைவர்]

தேர்ந்தெடுக்கப்பெற விரும்பும் வேட்பாளர்கள் தங்களின் வேட்பு மனுவினை இன்று பிற்பகல் 3–00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். வேட்பு மனு படிவம் வேண்டுவோர் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். வேட்பு மனுக்கள் இன்று பிற்பகல் 4–00 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் இன்று மாலை 5–00 மணிக்குள் தங்களது வேட்பு மனுவினைத் திரும்பப் பெறலாம்.

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்நாளோடு பல்கலைக்கழகத்தின் அமைப்பில் அவர் வகித்து வரும் உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

செல்லத்தக்க வேட்பு மனுக்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், அப்பல்கலைக்கழகங்களின் அமைப்புகளுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும். தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

4. கவன ஈர்ப்பு

திருநங்கைகளுக்கான நலவாழ்வுத் திட்டங்களைச் செயல்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன், திரு. கே. தங்கவேல், திரு. இரா. அண்ணாதுரை, திரு. க. பீம்ராவ், திரு. வீ.பி. நாகைமாலி, திரு. ஆர். ராமமூர்த்தி, திரு. வி.சி. சந்திரகுமார், திரு. ப. பார்த்தசாரதி, திரு. ர.ம. பாபு முருகவேல், திரு. கு. நல்லதம்பி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.